ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2040/11 - 2017 ඔක්තෝබර් මස 10 වැනි අඟහරුවාදා - 2017.10.10

*2040/11 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், மஹர பிரதேச செயலாளர் பிரிவில், அதிகாரிபத்துவ சிறு பிரிவில், கொங்கிதோட்ட கிராமத்தில் அமைந்துள்ள, கம்பஹா மாவட்ட நில அளவை மாஅதிபரால் தயாரிக்கப்பட்ட 2017.06.19 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. 4053 இல் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்ட 0.0659 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:-

***01. துண்டு இல. 01***

காணியின் பெயர் : தெல்கஹவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், 03 நிரந்தரக் கட்டிடங்கள், கழிவறை மற்றும் பாதுகாப்பு அறையொன்று காணப்படுகின்றது, கொங்கிதோட்ட பொலிஸ் காவல்அறை அமைந்துள்ளது; உரிமை கோருபவர்: தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை; விஸ்தீரணம்: 0.0659 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு மஹர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. எஸ். ஐ. விமலசேன,
பிரதேச செயலாளர்,
மஹர.

பிரதேச செயலகம்,
மஹர,
2017, ஒற்றோபர் 04.

10 - 892



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. உது 2/2/10/113.
காணி அமைச்சின் இல. எல்டீ/05/2006/வீஈ/335.

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் 2017.02.28 ஆந் திகதிய 2008/11 ஆம் இலக்கங் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிக்கப்பட்ட திகதிகளுக்குப் பதிலாக கீழ்க் குறிக்கப்படும் திகதிகள் நியமிக்கப்படுகின்றன என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

| நீக்கப்பட வேண்டிய திகதிகள் | பதிலாக தெரிவு செய்யப்படும் திகதிகள் |
|---|---|
| 2017.04.17 | 2017.11.16 |
| 2017.04.24 | 2017.11.23 |

சுஜானி ஆர். விஜேதுங்க,
பிரதேச செயலாளர்,
உடதும்பர.

10 - 893

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.